**செய்தி வெளியீடு எண்: 87/2025** **நாள்: 27.10.2025**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியுடன் அனுசரிக்கப்பட்டது**

ஊழல் கண்காணிப்பிற்கான நாட்டின் உச்ச அமைப்பாக உள்ள மத்திய கண்காணிப்புக் குழு நாட்டின் பொது வாழ்வில் நேர்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வார நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இவ்வாண்டும், "விழிப்புணர்வு: நமது கூட்டுப் பொறுப்பு" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வார நிகழ்ச்சிகள் இன்று (27.10.2025) தொடங்கி வருகின்ற 02.11.2025 வரை நடைபெறுகின்றது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. மு.அ.சித்திக் இ.ஆ.ப., தலைமையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி (நிதி), திரு. மனோஜ் கோயல், (அமைப்புகள் மற்றும் இயக்கம்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மெட்ரோஸில் இன்று (27.10.2025) ஒருமைப்பாடு உறுதிமொழியை ஏற்றனர்.

ஊழல் கண்காணிப்பின் முக்கியத்துவம் குறித்து ஊழியர்கள் மற்றும் பிற பங்குதாரர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, இந்த வாரம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**